**கவனிக்க** .- இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2025 ஆம் ஆண்டுக்கான கண்டி மாவட்டத்தின் நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியல் ஒன்று தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது. .


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2448 - 2025 අගෝස්තු මස 01 වැනි සිකුරාදා - 2025.08.01

2448ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (II ஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1160 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1161 |
| உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1166 |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1168 |
| ஏல விற்பனைகள் | 1173 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, ஓகத்து மாதம் 22ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஓகத்து மாதம் 07ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1159 - B 82705 - 403 (2025/08)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் -மல்லாகம்

### சான்றுப்பொருட்களின் ஏல விற்பனை

01. மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான கீழ்க்காணும் பொருட்கள் 2025.08.23 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மல்லாகம் நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

02. குறிப்பிட்ட ஏதாவது பொருட்கள் சம்பந்தமாக உரிமை கோருபவர்கள் இருப்பின், ஏல விற்பனைக்கு குறிப்பிட்ட தினத்தில் ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் உரிமைக்கோரிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

03.பதிவாளரின் அனுமதி பெற்று ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர்,ஏல விற்பனைக்கென குறிப்பிட்ட பொருட்களை பொதுமக்கள் பார்வையிடலாம்..

04. நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் தகுந்த தொகையானது விற்பனையின் போது ஏற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில், மன்றின் விருப்பு உரிமையின் பிரகாரம் அப் பொருட்களை ஏல விற்பனையிலிருந்து நீக்கிவிடுவதற்கான உரிமையை மன்று கொண்டுள்ளது.

05. ஏல விற்பனையின் போது ஏலத்தில் வாங்கப்பட்ட பொருட்கள் உடனடியாக பணம் கொடுக்கப்பட்டு நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

06. பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்துடன் வருகை தர வேண்டும் எனவும் அறியத்தருகிறேன்.

(திருமதி) சுபராஜினி ஜெகநாதன்,
மேலதிக நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
மல்லாகம்.

**மாவட்ட நீதிவான் நீதிமன்றம், மல்லாகம்**
**சான்றுப் பொருட்களின் விபரம்**

| *தொடர் இல.* | *வழக்கு இலக்கம்.* | *சான்றுப் பொருள் இல.* | *சான்றுப்பொருட்களின் விபரங்கள்* |
|---|---|---|---|
| 1. | AR/354/18 | PR-68/17 | NP BB D 8935 இலக்க மோட்டார் சைக்கிள் |
| 2. | AR/790/18 | PR-52/17 | NP JI 2019 இலக்க மோட்டார் சைக்கிள் |
| 3. | AR/70/21 | PR-1267/20 | NP UZ 8405 இலக்க மோட்டார் சைக்கிள் |
| 4. | AR/134/21 | PR-699/20 | WP TU 6564 இலக்க மோட்டார் சைக்கிள் |
| 5. | AR/135/21 | PR-704/21 | NP GS 4345 இலக்க மோட்டார் சைக்கிள் |
| 6. | AR/1781/23 | PR-261/23 | NP WF 0542 இலக்க மோட்டார் சைக்கிள் |
| 7. | AR/1999/23 | PR-186/23 | NP JS 6638 இலக்க மோட்டார் சைக்கிள் |
| 8. | AR/2599/23 | PR-1001/23 | CP BHF 8650 இலக்க மோட்டார் சைக்கிள் |
| 9. | AR/06/24 | PR-1528/23 | 500-6715 இலக்க மோட்டார் சைக்கிள் |
| 10. | AR/07/24 | PR-1468/23 | 500-0263 இலக்க மோட்டார் சைக்கிள் |
| 11. | AR/822/24 | PR-1551/23 | பதிவு இல்லாத மோட்டார் சைக்கிள் |
| 12. | MC/3378/PC/15 (B-748/15) | PR/162/15 | NP PY 0428 பதிவு இலக்கம் உடைய TATA கைப் வாகனம் |
| 13. | B/16/H/21 Deposit | PR-1225/20 | NP YN 1285 இலக்க முச்சக்கர வண்டி |
| 14. | 67612/EX/21 (B-1276/19) | PR/1293/19 | 207-1216 இலக்க முச்சக்கர வண்டி |
| 15. | 50445/S/18 Deposit | PR-219/18 | பதிவு இலக்கம் இல்லாத கை உழவு இயந்திரம் (Kubeta) |
| 16. | 40716/MT/16 | PR-285/16 | பதிவு இல்லாத மோட்டார் சைக்கிள் |
| 17. | 41683/MT/16 | PR-195/16 | பதிவு இல்லாத மோட்டார் சைக்கிள் |
| 18. | 42369/PC/16 (B- 488/ 16) | PR-43/16 | பதிவு இல்லாத மோட்டார் சைக்கிள் |
| 19. | 42585/MT/16 Deposit | PR-428/16 | பதிவு இல்லாத மோட்டார் சைக்கிள் |

| தொடர் இல. | வழக்கு இலக்கம். | சான்றுப் பொருள் இல. | சான்றுப்பொருட்களின் விபரங்கள் |
|---|---|---|---|
| 20. | 46280/MT/17 | PR-492/17 | NP WA 7004 இலக்க மோட்டார் சைக்கிள் |
| 21. | 46306/MT/17 (B-317/17) Deposit | PR-157/17 | NP BDY 2138 இலக்க மோட்டார் சைக்கிள் |
| 22. | 50689/PC/18 (B-226/PC/16) 50692/PC/18 (B-148/16) | PR-64/16 | பதிவு இல்லாத மோட்டார் சைக்கிள் |
| 23. | 54095/MT/19 | | NP JF 9078 பதிவு இலக்க மோட்டார் சைக்கிள் |
| 24. | 54354/ODD/19 (B-416/ODD/17) | PR-81/17 | NP UM 7288 பதிவு இலக்க மோட்டார் சைக்கிள் |
| 25. | 56140/MT/19 | PR-970/20 | NP ME 6895 பதிவு இலக்க மோட்டார் சைக்கிள் |
| 26. | 56517/MT/19 | PR-1066/19 | NP BDU 9947 பதிவு இலக்க மோட்டார் சைக்கிள் |
| 27. | 59179/MT/19 Deposit | PR-91/20 | NP MG 4433 பதிவு இலக்க மோட்டார் சைக்கிள் |
| 28. | 61256/PC/20 (B-1146/PC/19) | PR-437/19 | NP BBD 3199 பதிவு இலக்க மோட்டார் சைக்கிள் |
| 29. | 62040/MT/20 | PR-498/20 | EP UW 8842 பதிவு இலக்க மோட்டார் சைக்கிள் |
| 30. | 64184/MT/20 | PR-1316/20 | EP VH 2418 பதிவு இலக்க மோட்டார் சைக்கிள் |
| 31. | 66128/MT/21 | PR-110/21 | NP XT 4082 இலக்க மோட்டார் சைக்கிள் |
| 32. | 68706/MT/21 | | NP BFG 5424 பதிவு இலக்க மோட்டார் சைக்கிள் |
| 33. | 77391/PC (B-756/PC/19) | PR-1070/19 | 152-4451 பதிவு இலக்க மோட்டார் சைக்கிள் |
| 34. | MC/1224/PC/15 | PR-156/15 | NP VQ 6712 பதிவு இலக்க மோட்டார் சைக்கிள் |
| 35. | 2703/PC/15 (B-443/PC/15) | PR-187/15 | XZ 9157 பதிவு இலக்க எரிந்த மோட்டார் சைக்கிள் |
| 36. | MC/3554/MT/15 | PR-90/15 | பதிவு இல்லாத மோட்டார் சைக்கிள் |
| 37. | MC/3633/MT/15 (B-789/15) | PR-68/18 | WP TH 9630 பதிவு இலக்க மோட்டார் சைக்கிள் |
| 38. | 39401/MT/16 | PR-01-16 | பதிவு இல்லாத மோட்டார் சைக்கிள் |

08-01

---

# ஆய விற்பனையும் குத்தகையும்

**கண்டி கடவத்சத்தர கங்க வட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் 2025/2026 ஆம் ஆண்டு கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்றல்**

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக கள்ளுத் தவறணைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2025/ 2026 ஆம் ஆண்டில் கள்ளு சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளராகிய என்னால் 2025.09.04ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் காணப்படும் பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்-

(அ) கேள்வி வைப்புப் பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்விப்பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும்,

(ஆ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் கேள்விப் பத்திரத்துடன் முன் வைத்தல் வேண்டும்.

கேள்விகளையும் சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் முன் வைக்கும் கேள்விக்காரர்கள் மேற்படி கள்ளுத் தவறணைகளை விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைப்பத்திரத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைபிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடும் தொகையை இலக்கத்தில் மாத்திரமின்றி எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.
(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.
(iii) அனைத்துத் திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க கையொப்பத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.
(iv) பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரத்தை கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட -
(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்,
(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்,

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு அந்தக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறித்து கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். அல்லது கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டி பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. குத்தகை தொடர்பாக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விக்காரரும் கண்டி பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரர், சிறப்புரிமைகளை வாங்கியவர் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக கண்டி பிரதேச செயலகத்தில் வைப்பில் இடுதல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" என குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ, மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும். தேவையானஅளவு முத்திரைகளை ஒட்டி மதுவகை தவறணைகள் ஒப்பந்தப்பத்திரத் தொகுதியில் கையொப்பமிடல் வேண்டும்.

6. ஒப்பந்தப்படி உடன்படும் கேள்விப் பணத்தொகையை தவணை முறையில் ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

7. ஏதாவது ஒரு கேள்விப்பத்திரத்தை பலபேர் சேர்ந்து முன்வைப்பதாயின் அந்த ஒவ்வொரு ஆளினதும் சொந்த முகவரியை வெவ்வேறாகத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

8. கள்ளுத் தவறணைகளிலோ பிற அனுமதிப்பத்திரம் உடைய இடங்களிலோ விற்பனைக்காக மொத்தமாக கள்ளு பீப்பாய்க் கணக்கில் விநியோகிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

9. கண்டி எசல பெரஹரா நடைபெறும் வேளையிலும் வேறு காரணங்களுக்காகவும் இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் 1 ஆம் இலக்கக் கள்ளுத் தவறணையைத் தற்காலிகமாக மூடுவதற்கு என்னால் கட்டளையொன்றை விடுக்க வேண்டி ஏற்பட்டால், அவ்வாறு தவறணையை மூடும் காலப்பகுதிக்கு தவறணைக் கால வரையறையில் சலுகை ஏற்பாடு செய்யப்பட மாட்டாது.

10. கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் விற்பனை செய்ய முடியாதுபோன எஞ்சிய தவறணைகளை மீண்டும் 2025.10.02 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப முன்வைத்தல் வேண்டும்.

11. எனது முடிவே இந்தக் கேள்விகளை (டென்டர்) விற்பனை செய்வதற்கான இறுதி முடிவாகும்.

12. தவறணைகளை விற்பனை செய்வதற்குரிய ஒப்பந்த நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ள முடியும்.

எச்.எம்.எம்.யூ. பீ.ஹேரத்,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர மற்றும்
கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலகம்,
கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை,
2025,யூலை 24.

**அட்டவணை**

**கண்டி மாவட்டத்தில் 2025/2026 ஆம்ஆண்டுக்காக அனுமதியளிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் பட்டியல்**

| *தொடர் இல. பெயர்* | *பிரிவு* | *தவறணையை அமைக்க வேண்டிய பிரிவு* | *தவறணை திறந்திருக்கும் நேரம்* | *கேள்விப் பத்திரங்களை (டென்டர்) ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* |
|---|---|---|---|---|
| இல. 01 வட்டபுலுவ | கண்டி பிரிவில் இல.20, மஹய்யாவ மற்றும் இல. 07, மாபனாவதுர தேர்தல் பிரிவு | கட்டுகஸ்தோட்டை வீதியில் அந்த வீதியும் திருகோணமலை வீதி சந்தியில் கட்டுகஸ்தோட்டை வீதியும் வட்டாரந் தென்ன சந்திக்கும் இடையிலான பாதை கண்டி மாநகரில் இல.20, மஹய்யாவ மற்றும் இல. 07, மாபனா வதுர தேர்தல் பிரிவில் அமைந்துள்ள பிரதேசம் | மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 9.00 மணி வரை | 2025.09.04 ஆந் திகதி மு.ப.. 10.30 மணி வரை |
| கள்ளுத்தவறணை குத்தகைக் கேள்விகளுக்கான இறுப்புப் பணம் - 2025/ 2026 | | | | |
| இல. 01, வட்டபுலுவ | கள்ளுத் தவறணைக்கான குத்தகை | | ரூபா 5,000.00 | |

08-20/1

---

**கட்டான பிரதேச செயலகம்**
**2026 ஆம் ஆண்டுக்கான கள்ளுத்தவறணை ஏல விற்பனை**

2026, சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2026, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுல் கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டான பிரதேச செயலகப் பகுதியில் உள்ள கள்ளுத் தவறணைகளில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்பனை செய்யும் தனி உரிமை மற்றும் கொள்வனவு செய்தல் என்பவற்றுக்காக 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதி வெளியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் குறுப்பிடப்பட்ட கள்ளு விற்பனை செய்தல் விதிகளுக்கேற்பவும் தற்போது நடைமுறையில் உள்ள அனைத்து மதுவரி விதிகளுக்கேற்பவும் மற்றும் கீழே குறிப்பிடப்படும் விதிகளுக்கேற்பவும் 2025.09.29 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை என்னால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் இலங்கையின் எந்தவொரு பிரதேச செயலகத்தினூடாகவும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் கேள்விப்பத்திர விண்ணப்பங்களை பெற்று உரிய முறைப்படி பூரணப்படுத்தி இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தவறணைக்கான ஒப்பந்தப் பணத்தை செலுத்தி பெற்றுக் கொண்ட ரசீதையும் பிரகடனப்படுத்திய ஒப்பந்த நிபந்தனைகளின்படி பெற்றுக்கொண்ட வருமான சான்றிதழையும் (உரிய ஒப்பந்தப் பத்திரத்தில் குறிப்பிட்ட ஒப்பந்த பணத்தில் குறைந்தது 15% பெறுமதியாவது வருமானச் சான்றிதழில் இருத்தல் வேண்டும்.) முத்திரையிடப்பட்ட கடித உறையொன்றினுள் இட்டு அக்கடித உறையின் இடது பக்கத்தில் தான் கேள்விப் பத்திரத்தில் கோரும் தவறணையின் இலக்கம் மற்றும் பெயர் போன்றவற்றைத் தெளிவாக எழுதி உரிய தவறணைகளுக்கான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முடிவுத் திகதிகள் மற்றும் உரிய நேரத்திற்கு முன்பு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இட்டு கட்டானை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும் படி செய்தல் வேண்டும்.

03. கேள்விப்பத்திரங்களில் ஏதேனும் மாற்றங்கள் செய்யும் பட்சத்தில் அந்த இடத்தில் ஒப்பந்தக் காரார் தனது பூரண கையொப்பத்தை இட்டு அதனை உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யாத பட்சத்தில் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

04. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமான 2025.09.29 ஆந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு அனைத்து ஒப்பந்தக் காரர்களும் கட்டானை பிரதேச செயலகத்தில் பிரசன்னமாக இருத்தல் வேண்டும்.

05. ஏதேனும் விடயங்கள் கேள்விப் பத்திரத்தில் குறிப்பிடப்படாமல் விடுபட்டிருந்தால் அல்லது வேறு ஏதேனும் பிழைகள் இருந்தாலும் அவற்றை நிராகரிக்கும் அதிகாரம் கட்டானை பிரதேச செயலாருக்கு உண்டு.

06.குறித்த தினத்தில் ஏல விற்பனை செய்ய முடியாமல் போன கள்ளுத்தவறணைகள் மீள 2025.10.28 ஆந் திகதி ஏல விற்பனை செய்யப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரம் முன்வைத்தலும் மேற்குறிப்பிட் வர்த்தமானி அறிவித்தலுக்கேற்ப இருத்தல் வேண்டும்.

07. ஏல விற்பனை மூலம் தனி உரிமை விற்பனை பெற்றவர் என பிரகடனப்படுத்தப்பட்டதன் பின் அத்தினத்தில் அதாவது ஏல விற்பனைநாளில் பி.ப. 2.00 மணிக்கு முன்பு கட்டானை பிரதேச செயலாளரால் நிர்ணயிக்கப்படும் பணத் தொகையாக இரு தவணைப் பணத் தொகையை விடக் கூடிய பணத்தை பிணை வைப்புப் பணமாக செலுத்தி தவறணை தொடர்பான நிபந்தனைகளுக்கு உட்பட்டு கையொப்பம் இடல் வேண்டும்.

08. கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கும் போது அறிந்து கொள்ள வேண்டிய ஏதேனும் விபரங்கள் இருப்பின் அவற்றை கட்டானை பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

ஏ. என்.ஜி.பி. அத்துகோரள,
பிரதேச செயலாளர்,
கட்டானை.

பிரதேச செயலகம்,
கட்டானை,
2025, யூன் 22.

**அட்டவணை**

| *தொடர் இல.* | *தவறணையின் பெயரும் இலக்கமும்* | *பிரிவு* | *தவறணை அமைய வேண்டிய உள்ளூராட்சி வட்டாரம்* | *தவறணை திறக்கும்* நேரம் | *தவறணை மூடப்படும்* நேரம் | *ஒப்பந்தத்திற்கான வைப்புப் பணம்* | *கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினம் மற்றும் நேரம்* |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | மூக்கலன்கமுவ இல. 13 | கட்டானை | மூக்கலன்கமுவ ஊரில் மட்டும் | மு.ப.10.00 மணி | பி.ப.9.00 மணி | 4,000 ரூபாய் | 2025.09.29 மு.ப.10.30 மணி |
| 2. | கட்டுநாயக்க இல. 14 | கட்டானை | கட்டுநாயக்க ஊரில் மட்டும் | மு.ப.10.00 மணி | பி.ப.9.00 மணி | 4,000 ரூபாய் | 2025.09.29 மு.ப.10.30 மணி |
| 3. | எத்காலை இல. 13 | கட்டானை | எத்காலை ஊரில் மட்டும் | மு.ப.10.00 மணி | பி.ப.9.00 மணி | 500 ரூபாய் | 2025.09.29 மு.ப.10.30 மணி |
| 4. | கிழக்கு கட்டானை இல.24 | கட்டானை | கிழக்கு கட்டானை ஊரில் மட்டும் | மு.ப.10.00 மணி | பி.ப.9.00 மணி | 2,000 ரூபாய் | 2025.09.29 மு.ப.10.30 மணி |
| 5. | தெமஹன் சந்தி இல. 27 | கட்டானை | தெமஹன் சந்தி ஊரில் மட்டும் | மு.ப.10.00 மணி | பி.ப.9.00 மணி | 2,000 ரூபாய் | 2025.09.29 மு.ப.10.30 மணி |
| 6. | பம்புக்குழிய இல. 26 | கட்டானை | பம்புக்குழி ஊரில் மட்டும் | மு.ப.10.00 மணி | பி.ப.9.00 மணி | 1,000 ரூபாய் | 2025.09.29 மு.ப.10.30 மணி |

08- 14

**நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவு**

**பி.செ./நீர்/ 01/11/5/2026**

2026 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணைகளுக்கான விலைமனு கோரல்

1982, ஆவணி மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான விலைமனு நிபந்தனைகள் மற்றும் தற்போது ஏற்புடைய மதுவரி உரிமம் தொடர்பான பொது நிபந்தனைகளுக்கு அமைவாக கள்ளுத் தவறணை விற்பனை செய்வதற்கான கீழ்வரும் கள்ளுத் தவறணைகளுக்கு 2026, தை மாதம் 1 ஆந் திகதி முதல் 2026, மார்கழி 31 ஆந் திகதி வரையுமான தனியாள் உரிமையின் கீழ் விற்கப்படுவதற்கான விலைமனுக்கள் 2025.09.25 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. சகல கேள்விகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய விலைமனு கேள்விப்பத்திரங்களை சரியான முறையில் பூரணப்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி வைப்புத் தொகையை செலுத்தி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும், கள்ளு விலைமனு நிபந்தனையின் பிரகாரம் பெற்றுக்கொண்டுள்ள சொத்துப் பத்திரத்தையும் , (சொத்துப் பத்திரம் தாங்கள் முன்வைக்கும் கேள்வி பெறுமதியில் 15% வீதத்திற்குக் குறைவாக இருத்தல் கூடாது). அதற்குரிய உறுதியின் பிரதியையும் வழங்க வேண்டும்.

3. முறையாக பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் முத்திரையிடப்பட்ட தபால் உறையினுள் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் "இலக்கம் .....................குறிக்கும் ................. கோரும் கள்ளுத்தவறணைக்கான கேள்விப்பத்திரம்" என இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் விலைமனு கோரும் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி 2025. 09.25 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலிலோ பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுவதன் மூலமோ பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரத்தில் மேற்கொள்ளும் திருத்தங்களை விலைமனுதாரரின் முழுக் கையொப்பத்துடன் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமான 2025.09.25 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளல் நிறைவடைந்ததன் பின் உடனே கேள்விப்பத்திரம் திறக்கப்படும். அத்தருனம் சகல விலைமனுதாரரும் நீர்கொழும்பு பிரதேச செயலகத்திற்கு வருகை தரல் வேண்டும்.

6. உரிய முறையில் மற்றும் முக்கியமான விடயங்கள் நிரப்பப்படாத கேள்விப் பத்திரம் அல்லது கேள்விப்பத்திரங்களை நிராகரிக்கும் உரிமை என்னைச் சார்ந்தது.

7. மேலே குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்கப்படாத கள்ளுத் தவறணை மற்றும் வெளிநாட்டு மதுபானம் 2025.10.24ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்கப்படுவதோடு அன்றைய தினம் கேள்விப்பத்திரத்தை முன்வைக்கும்போது இவ்வர்த்தமானப் பத்திரிகையில் இரண்டாவது பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரத்தை கையளிக்கும் நபர் "தனியாள் வரப்பிரசாதத்தை கொள்வனவு செய்துள்ள நபர் " எனும் வெளியீட்டை வெளியிட்ட பின்னர், அன்றே பி. ப. 3.00 மணிக்கு முன்னர் என்னால் குறிப்பிடப்படும் மாதத்திற்கான குத்தகைப் பணம் போன்ற இரு மடங்கிற்கு குறையாத பணத்தொகையை பிணை வைப்பாக என்னிடம் செலுத்தி குத்தகை தொடர்பான நிபந்தனைகளுக்கு கையெழுத்திட வேண்டும்.

9. மேலதிக தகவல்கள் தேவைப்படின் நீர்கொழும்பு பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.
(தொ.பே.இல.031-2224633)

10. இக்கேள்வி விற்பனை தொடர்பான எனது முடிவே இறுதி முடிவாகும்.

ரசிகா மல்லவஆரச்சி,
பிரதேச செயலாளர் ,
நீர்கொழும்பு.

பிரதேச செயலகம்,
நீர்கொழும்பு,
2025, யூலை 23.

**அட்டவணை**

| *தொடர் இல.* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *கள்ளுத் தவறணையின் இலக்கமும் பெயரும்* | | *கள்ளுத் தவறணை அமைக்கப்பட வேண்டிய உள்ளூர் பிரிவு* | *கள்ளுத் தவறணை திறந்திருக்க வேண்டிய நேரம்* | *கேள்விப்பத்திர வைப்புத் தொகை ரூ .ச.* | *கேள்விப் பத்திரங்கள் பார மெடுக்கப் படும் இறுதித் திகதி மற்றும் நேரம்* |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | நீர்கொழும்பு | இல. 10 | செத்தப்பாடுவ | செத்தப்பாடுவ கிராமம் மட்டும் | மு. ப. 10.00 மணி முதல் பி. ப. 9.00 மணி வரை | 5,000 | 2025.09.25 மு.ப. 10.30 |
| 2. | | இல. 11 | பசியாவத்த | பசியாவத்த கிராமம் மட்டும் | | 5,000 | |
| 3. | | இல. 12 | பிட்டிபனை | பிட்டிபனை கிராமம் மட்டும் | | 5,000 | |
| 4. | | இல. 15 | குரண | குரண கிராமம் மட்டும் | | 5,000 | |
| 5. | | இல. 16 | காமாச்சி ஓடை | காமாச்சி ஓடை கிராமம் மட்டும் | | 5,000 | |
| 6. | | இல. 17 | உடையார் தோப்பு | உடையார் தோப்பு கிராமம் மட்டும் | | 5,000 | |
| 7. | | இல. 18 | குடாபாடுவ | குடாபாடுவ கிராமம் மட்டும் | | 1,000 | |
| 8. | | இல. 19 | தலுபத்த | தலுபத்த கிராமம் மட்டும் | | 5,000 | |
| 9. | | இல. 20 | போருதொட்ட | போருதொட்ட கிராமம் மட்டும் | | 3,000 | |
| 10. | | இல. 21 | கொச்சிக்கடை | கொச்சிக்கடை கிராமம் மட்டும் | | 3,000 | |
| 11. | | இல. 22 | பழங்கதுர | பழங்கதுர கிராமம் மட்டும் | | 1,500 | |

08 - 23/1

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**பொது அறிவித்தல்**

**கம்பனி நிலை (Status) மாற்றம்**

**இண்சுவர்மீ இன்சுரன்ஸ் புரோகர்ஸ் ( பிறைவட்) லிமிட்டெட் (“கம்பனி” ) அந்தஸ்த்தில் ஏற்பட்ட மாற்றம் சம்பந்தமாக பங்குதாரர்களால் நிறைவேற்றப்பட்ட ஒரு விசேட தீர்மானத்தைத் தொடர்ந்து கம்பனியின் நிலை பின்வரும் முறையில் 2025, யூலை 18 ஆந் திகதியிலிருந்து மாற்றப்பட்டது என 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின் ( திருத்தப்பட்டவாறு ) விதிகளுக்கு ஏற்ப இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.**

*முன்னைய பெயர் :* இண்சுவர்மீ இன்சுரன்ஸ் புரோகர்ஸ் ( பிறைவட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* PV 114473
*கம்பனியின் பதிவு அலுவலக முகவரி:* இல. 14 A, பொய்ட் பிளேஸ், கொழும்பு 03
*புதிய பெயர் :* இண்சுவர்மீ இன்சுரன்ஸ் புரோகர்ஸ் லிமிட்டெட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எஸ்எஸ்பி கோப்பரேட் சேர்விசஸ் ( பிரைவட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

08-26

---

**தி டீ லீஃப் ரிசார்ட் ஹோல்டிங் (பிரைவேட்) லிமிடெட் - (PV 72507)**
**கடன் வழங்குநர்களின் விருப்பத்திற்கமைவாக கட்டாயத் தீர்வுக்கட்டளையின் கீழ் கலைப்பாளர் நியமிக்கப்பட்டதற்கான அறிவித்தல்**

**கம்பனிகள் சட்ட இல. 07 இன் 2007 இன் பிரிவு 346(1) இன் படி**

இல.407/ 5, நோமிஸ் வெரகல மாவத்தை, ஹோகந்தர தெற்கு, ஹோகந்தர ஐ வசிப்பிடமாகக் கொண்ட நான், வசந்த தியாக படகொட, தி டீ லீஃப் ரிசார்ட் ஹோல்டிங் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் கலைப்பாளராக நியமிக்கப்பட்டதனைத் தெரிவிக்கின்றேன். இந்த நியமனம் 2025, யூலை 21 ஆந் திகதி Brown & Company PLC, 481, T.B. ஜெயஹ் மாவத்த, கொழும்பு 10 இல் நடைபெற்ற நம்பிக்கையாளர்களின் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

வசந்த தியாக படகொட,
கலைப்பாளர்.

இல.407/5,நோமிஸ் வெரகல மாவத்தை,
ஹோகந்தர தெற்கு,
ஹோகந்தர

08-31

---

**தி டீ லீஃப் ரிசார்ட் ஹோல்டிங் (பிரைவேட்) லிமிடெட் - (PV 72507)**
**கடன் வழங்குநர்களின் விருப்பத்திற்கமைவான கட்டாயத் தீர்வுக்கட்டளையின் கீழ் கம்பனியின் கடன்வழங்குனர்களால் நடைபெறும் கட்டாயத் தீர்வுக் கட்டளை அறிவித்தல்**

2025, யூலை 21 ஆந் திகதி Brown & Company PLC, 481, T.B. ஜெயஹ் மாவத்த. கொழும்பு 10 இல், காலை 10.00 மணிக்கு நடைபெற்ற கூட்டங்களில் உறுப்பினர்களும் நம்பிக்கையாளர்களும் பின்வரும் சிறப்பு தீர்மானங்களை நிறைவேற்றினர்.

* தி டீ லீஃப் ரிசார்ட் ஹோல்டிங் ( பிரைவேட்) லிமிடெட் இன் நடவடிக்கைகள் நம்பிக்கையாளர்களின் விருப்பத்திற்கமைவான கட்டாயத் தீர்வுக்கட்டளையின் கீழ் முடிவுக்கு கொண்டு வரப்படும்.

* திரு. வசந்த தியாக படகொட, இல. 407/5, நோமிஸ் வெரகல மாவத்த, ஹோகந்தர தெற்கு, ஹோகந்தர கம்பனியின் நம்பிக்கையாளர்களின் கலைப்பாளர் நியமிக்கப்படுவார். அவருக்கு , தீர்வுக்கட்டளைக்கான

**பொதுவான அட்டவணை விகிதத்தில் கொடுப்பனவு செய்யப்படும்.**

*** 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்படி கலைப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ள சகல அதிகாரங்களையும் அவர் பயன்படுத்தலாம்.**

*** இயக்குனர்களின் அதிகாரங்கள் இத்துடன் நிறைவு பெறும்.**

**வாரியத்தின் உத்தரவின் பேரில்,**

**தி டீ லீஃப் ரிசார்ட் ஹோல்டிங் (பிரைவேட்) லிமிடெட்,**
LOLC கோர்ப்பரேட் செர்விசஸ் ( பிரைவேட்) லிமிடெட்.
நிறுவன செயலாளர்கள்.

2025, யூலை 23.

08-32

---

# அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

**நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவு**

**பி.செ./நீர்/ 01/11/5/2026**

**2025 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு மதுபானத் தவறணைகளுக்கான விலைமனு கேள்விப்பத்திரம்**

1982, ஆவணி மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான விலைமனு நிபந்தனைகள் மற்றும் தற்போது ஏற்புடைய மதுவரி உரிமம் தொடர்பான பொது நிபந்தனைகளுக்கு அமைவாக கள்ளுத் தவறணை விற்பனை செய்வதற்கான கீழ்வரும் வெளிநாட்டு மதுபானத் தவறணைகளுக்கு 2026, தை மாதம் 01 ஆந் திகதி முதல் 2026, மார்கழி 31 ஆந் திகதி வரையுமான தனியாள் உரிமையின் கீழ் விற்கப்படுவதற்கான விலைமனுக்கள் 2025.09.25ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. சகல கேள்விகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய விலைமனுக் கேள்விப்பத்திரங்களை சரியான முறையில் பூரணப்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி வைப்புத் தொகையை செலுத்தி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும், கள்ளு விலைமனு நிபந்தனையின் பிரகாரம் பெற்றுக்கொண்டுள்ள சொத்துப் பத்திரத்தையும், (சொத்துப் பத்திரம் தாங்கள் முன்வைக்கும் கேள்விப் பெறுமதியில் 15% வீதத்திற்குக் குறைவாக இருத்தல் கூடாது) அதற்குரிய உறுதியின் பிரதியையும் வழங்க வேண்டும்.

3. முறையாக பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் முத்திரையிடப்பட்ட தபால் உறையினுள் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் "இலக்கம் .....................குறிக்கும் ................ வெளிநாட்டு மதுபானத் தவறணைக்கான கேள்விப்பத்திரம்" என இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் விலைமனு கேட்கும் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி 2025.09.25ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலிலோ பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுவதன் மூலமோ பிரதேச செயலாளருக்கு கிடைக்க செய்தல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரத்தில் மேற்கொள்ளும் திருத்தங்களை விலைமனுதாரரின் முழுக் கையொப்பத்துடன் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமான 2025.09.25 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளல் நிறைவடைந்தவுடன் பின் உடனே கேள்விப்பத்திரம் திறக்கப்படும். அத்தருணம் சகல விலைமனுதாரரும் நீர்கொழும்பு பிரதேச செயலகத்திற்கு வருகை தரல் வேண்டும்.

6. உரிய முறையில் மற்றும் முக்கியமான விடயங்கள் நிரப்பப்படாத கேள்விப் பத்திரம் அல்லது கேள்விப்பத்திரங்களை நிராகரிக்கும் உரிமை என்னைச் சார்ந்தது.

7. மேலே குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்கப்படாத வெளிநாட்டு மதுபானத் தவறணை 2025.10.24 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்கப்படுவதோடு அன்றைய தினம் கேள்விப்பத்திரத்தை முன்வைக்கும்போது இவ்வர்த்தமானப் பத்திரிகையில் இரண்டாவது பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரத்தை கையளிக்கும் நபர் "தனியாள் வரப்பிரசாதத்தை கொள்வனவு செய்துள்ள நபர் " எனும் வெளியீட்டை வெளியிட்ட பின்னர், அன்றே பி. ப. 3.00 மணிக்கு முன்னர் என்னால் குறிப்பிடப்படும் மாதத்திற்கான குத்தகைப் பணம் போன்ற

இரு மடங்கிற்கு குறையாத பணத்தைப் பிணை வைப்பாக என்னிடம் செலுத்தி குத்தகை தொடர்பான நிபந்தனைகளுக்கு கையெழுத்திட வேண்டும்.

9. மேலதிக தகவல்கள் தேவைப்படின் நீர்கொழும்பு பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (தொ.பே.இல.031-2224633)

10. இக்கேள்வி விற்பனை தொடர்பான எனது முடிவே இறுதி முடிவாகும்.

ரசிகா மல்லவஆரச்சி,
பிரதேச செயலாளர்,
நீர்கொழும்பு.

பிரதேச செயலகம்,
நீர்கொழும்பு,
2025, யூலை 23.

**அட்டவணை**

| *தொடர் இல.* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *கள்ளுத் தவறணையின் இலக்கமும் பெயரும்* | | *கள்ளுத் தவறணை அமைக்கப்பட வேண்டிய உள்ளூர் பிரிவு* | *கள்ளுத் தவறணை திறந்திருக்க வேண்டிய நேரம்* | *கேள்விப்பத்திர வைப்புத் தொகை ரூ .ச.* | *கேள்விப் பத்திரங்கள் பார மெடுக்கப் படும் இறுதித் திகதி மற்றும் நேரம்* |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | நீர்கொழும்பு | இல. 02 | கிறீன்பார் (வெளிநாட்டு மதுபானம்) | இல.08 பிரிவு குண்டன்வில மட்டும் | மு. ப. 10.00 மணி முதல் பி. ப. 9.00 மணி வரை | 3,000 | 2025.09.25 மு.ப. 10.30 |

08 - 23/2

---

**கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் 2025/ 2026 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு குடிவகை தவறணைகளை குத்தகைக்கு விற்றல்**

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக வெளிநாட்டுக் குடி வகை தவறணைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப் பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2025/ 2026 ஆம்ஆண்டில் வெளிநாட்டு குடிவகை சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளை பிரதேச செயலாளராகிய என்னால் 2025.09.04 ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் காணப்படும் பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும், அத்துடன்-

(அ) கேள்வி வைப்புப் பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்விப்பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும்,

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் கேள்விப் பத்திரத்துடன் முன்வைத்தல் வேண்டும்.

கேள்விகளையும் சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் முன் வைக்கும் கேள்விப்பத்திரதாரர்களுக்கு மேற்படி வெளிநாட்டு குடிவகை தவறணைகளை விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைப்பத்திரத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.
(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.
(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருந்தாலும் கேள்விப்பத்திரதாரரின் சுருக்க கையொப்பத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.
(iv) பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரத்தை கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட -
(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்,
(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்,

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அந்த கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறித்து கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிடின் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டி பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. குத்தகை தொடர்பாக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவுநேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விப்பத்திரதாரரும் கண்டி பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விப்பத்திரதாரர், சிறப்புரிமைகளை வாங்கியவர் என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக கண்டி பிரதேச செயலகத்தில் வைப்பில் இடுதல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ, மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும். தேவையானளவு முத்திரைகளை ஒட்டி மதுவகை தவறணைகள் ஒப்பந்தப் பத்திரத் தொகுதியில் கையொப்பமிடல் வேண்டும்.

6. ஒப்பந்தப்படி உடன்படும் கேள்விப் பணத்தொகையை தவணை முறையில் ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்த முடியும்.

7. ஏதாவது ஒரு கேள்விப்பத்திரத்தை பலபேர் சேர்ந்து முன்வைப்பதாயின் அந்த ஒவ்வொரு ஆளினதும் சொந்த முகவரியை வெவ்வேறாக தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

8. வெளிநாட்டு மதுபான தவறணைகளிலோ பிற அனுமதிப்பத்திரம் உடைய இடங்களிலோ விற்பனைக்காக மொத்தமாக பீப்பாய்க் கணக்கில் வெளிநாட்டு குடிவகை விநியோகிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

9. கண்டி எசல பெரஹரா நடைபெறும் வேளையிலும் வேறு காரணங்களுக்காகவும் இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் 1 ஆம் இலக்க வெளிநாட்டு மதுபானத் தவறணையை தற்காலிகமாக மூடுவதற்கு என்னால் கட்டளையொன்றை விடுக்க வேண்டி ஏற்பட்டால், அவ்வாறு தவறணையை மூடும் காலப்பகுதிக்கு, தவறணைக் கால வரையறையில் சலுகை ஏற்பாடு செய்யப்பட மாட்டாது.

10. மேற்படி கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் விற்பனை செய்ய முடியாதுபோன எஞ்சிய வெளிநாட்டு தவறணைகளை மீண்டும் 2025.10.02ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப முன்வைத்தல் வேண்டும்.

11. எனது முடிவே இந்த கேள்விப் பத்திரங்களை (டென்டர்) விற்பனை செய்வதற்கான இறுதி முடிவாகும்.

12. தவறணைகளை விற்பனை செய்வதற்குரிய ஒப்பந்த நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்து கொள்ள முடியும்.

எம்.எம்.எம்.யூ.பீ.ஹேரத்,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை.

பிரதேச செயலகம்,
கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை,
2025, யூலை 24.

**அட்டவணை**

கண்டி மாவட்டத்தில் 2025/2026 ஆம் ஆண்டுக்கான அனுமதியளிக்கப்பட்ட வெளிநாட்டு குடிவகை தவறணைகளின் பட்டியல்

| *தொடர் இலக்கமும் பெயரும்* | *பிரிவு* | *தவறணையை அமைக்கவேண்டிய பிரிவு* | *தவறணை திறந்திருக்கும் நேரம்* | *கேள்விப்பத்திரங்களை (டென்டர்) ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* |
|---|---|---|---|---|
| இல. 01 கொழும்பு வீதி | கண்டி நகரத்தில் இல.17, யட்டிநுவர மற்றும் இல. 18, கொட்டுகொடல்ல வீதி | கண்டி நகரத்தில் யட்டிநுவர மற்றும் இல.18, கொட்டுகொடல்ல வாக்கெடுப்புப் பிரிவிற்குள் கொழும்பு வீதி மற்றும் காசல் ஹில் வீதி சந்தியிலிருந்து கொழும்பு வீதி வடுகொடபிட்டிய பாதையில் சந்திக்கு இடைப்பட்ட பகுதி கொழும்பு வீதி இரு மருங்கிலும் | மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 9.00 மணிவரை | 2025.09.04 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

வெளிநாட்டு குடிவகை தவறணைகள் குத்தகை கேள்விகளுக்கான இறுப்புப் பணம் 2025/ 2026

இல. 01 ,கொழும்பு வீதி வெளிநாட்டு குடிவகை தவறணை குத்தகை - ரூபா 5000.00

08-20/2

---

**வெளிநாட்டு மதுபான விற்பனை அனுமதிப்பத்திரம் தொடர்பான விண்ணப்பம்**

**கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணை 2025/ 2026 ஆம் ஆண்டுக்கான குத்தகை விற்பனை**

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டிற்கும் இதன் பிற்காலம் தொடர்பான வெளிநாட்டு மதுபான விற்பனை சட்டதிட்டங்களுக்கு அமையவும் இக்காலத்தில் செல்லுபடுயாகும் அனைத்து வருமான வரி அத்தாட்சி பத்திரங்களுக்கும் செல்லுபடியாகும் போது விற்பனை வரி சட்ட திட்டங்களுக்கு அமையவும் மதுபானம் சில்லறையாக விற்பதற்கான வரப்பிரசாதமொன்றை விலைக்கு வாங்குவதற்கான தெல்தோட்டை பிரதேச செயலாளர் மேலதிக அரசாங்க அதிபரான என்னால் 2025.08.11 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியுமான பொதுவான விண்ணப்பப்படிவத்தின் மூலம் தயார் செய்யப்படல் வேண்டியதுடன்-

(அ) கேள்வி வைப்புப் பணம் என்ற வகையில் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பின்வரும் துணை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் திட்டமான கேள்வி வைப்புப் பணத்தொகையை வைப்பில் இட்டு அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள பற்றுச்சீட்டையும்,

(ஆ) கேள்வியாளர்களின் சொத்துக்கள் அவை அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடத்தில் பெற்றுக்கொண்ட சொத்துக்கள் தொடர்பான சான்றிதல் ஒன்றை முன்வைத்தல் வேண்டும்.

03. கேள்வி மற்றும் சொத்துக்கள் உறுதிப்பத்திரம் முன்வைப்பது தொடர்பாக குறிப்பிட்ட வெளிநாட்டு மதுபான தவறணை குத்தகைக்கு விற்றல் சட்டதிட்டங்களில்' அடங்கும் சட்டங்கள் ஒழுங்கு முறையாக பின்பற்றப்படல் வேண்டும் என்று கேள்வி முன்வைப்போரிடத்தில் மிகக் கடுமையாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கேள்விப்பத்திரம் பூரணப்படுத்துவதில் கேள்வியாளர் பின்வரும் தேவைகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும் :

(i) கேள்விப்பத்திரத்தை முழுமையாக பூரணப்படுத்தல் வேண்டும். அவ்வாறு செய்யும் போது அங்கு குறிப்பிட்டுள்ள பணத் தொகையை இலக்கத்தில் மட்டுமன்றி எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.
(ii) பூரணப்படுத்தப்பட்டுள்ள கேள்வி விண்ணப்பத்தில் சாட்சியாளர்களின் கையெழுத்து இடப்பட்டிருத்தல் வேண்டும்.
(iii) மாற்றங்கள் செய்யும் அனைத்து இடங்களிலும் சொற்கள் திருத்துவதிலும் கேள்வியாளர்களின் சுருக்க கையொப்பமும் திகதியும் இட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அங்கு தேவைகளுக்கு முரணாக முன்கைவைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

04. முறையாக முன்வைக்கப்பட்ட கேள்விப்பத்திரம் -
(அ) பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் சமர்ப்பிக்கப்பட்டு பணம் செலுத்தப்படுகின்ற பற்றுச்சீட்டு,
(ஆ) சொத்து விபரம் தொடர்பான அத்தாட்சி ஆகியவற்றுடன் கடித உறையொன்றில் இட்டு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது மூலையில் தவறணை இலக்கமும் பெயரும் குறிப்பிட்டு தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்,

05. குத்தகைக்காக கேள்வி ஏற்றுக்கொள்ளப்படுவது முடிவடையும் நேரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நேரத்தில் அனைத்து கேள்வியாளர்களும் தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும் .

06. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்வியாளர் சிறப்பிரிமைகளை வாங்கியவர்கள் என பிரகடனப்படுத்தப் பட்ட பின் அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்கு முன்பு தெல்தோட்டை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகை ஒன்றினை பிணைப் பணமாக தெல்தோட்டை பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய கள்ளு தவறணைகள் நிபந்தனை கொத்தில் கையொப்பமிடப்படல் வேண்டும். இக் கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுக்காக குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது வங்கியினால் வழங்கப்பட்ட பாதுகாப்பான காசோலை என அழைக்கப்படும் காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

07. கள்ளுத் தவறணைகளினாலே வேறு வலுவுடைய அனுமதி பத்திரங்களை உடைய மது வியாபார நிலையங்களினாலே விற்பனைக்காக மொத்தமாக (பீப்பாய் கணக்கில்) கள்ளுக்குடி வகைகள் விநியோக்கப்பட மாட்டாது.

8.பாதுகாப்புக் காரணமாகவோ அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற வேறு ஏதும் காரணத்தினாலோ வெளிநாட்டு மதுபான தவறணை தற்காலிகமாக மூடி விடுவதற்குரிய கட்டளை ஒன்று பிறப்பிப்பதற்கு எனக்கு ஏற்பட்டால் அவ்வாறு தவறணை முடிய காலம் தொடர்பாக குத்தகை தொடர்பாக குத்தகை வாரத்தில் சலுகை ஏற்பாடு ஏதும் செய்யப்பட மாட்டாது.

9.முன்னர் வெளிநாட்டு மதுபானசாலை ஒன்றை நமாத்திச்சென்றது தொடர்பாக அரசாங்கத்திற்கு ஏதும் ரொக்கப்பணம் கொடுக்கப்பட வேண்டி இருந்தால் கேள்வியை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் அந்த மிகுதி ரொக்கப்பணத்தை கொடுத்து பூரணப்படுத்தப்பட வேண்டும்.

10. மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

ஜி.கே.ஜி.ரீ.டி. கெதரகும்புர,
பிரதேச செயலாளர்,
தெல்தோட்டை.

பிரதேச செயலகம்,
தெல்தோட்டை,
2025.07.23.

**அட்டவணை**

கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அனுமதியளிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணை பத்திரம்

| *தொடர் இலக்கமும் பெயரும்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *தவறணையை அமைக்கப்பட வேண்டிய பிரதேசம்* | *தவறணை திறந்திருக்கும் நேரம்* | *கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* |
|---|---|---|---|---|
| இல. 18 வெளிநாட்டு மதுபான சாலை | தெல்தோட்டை | தெல்தோட்டை பிரதேச செயலக பிரவிற்குள் | மு. ப. 11.00 மணி தொடக்கம் பி. ப. 2.00 மணிவரை<br><br>பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 8.00 மணி வரை | 2025.08.11 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை |

வெளிநாட்டு தவறணையின் குத்தகை விற்பனைக்காக வைப்புப்பணமாக வைக்கப்பட வேண்டிய தொகை ரூபா 1000.00 ஆகும்.

08-18

---

# ஏல விற்பனைகள்

**கார்கில்ஸ் வங்கி பிஎல்சி**
**( முன்னர் கார்கில்ஸ் வங்கி லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)**
**மைட்லேண்ட் கிரெசென்ட் கிளை**
**பிரசித்த ஏல விற்பனை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை

அதே சமயம் கத்தோட்ட ரல்லலகே கெஹான் காஞ்சன ஜயவர்தன என்பவர் ஈடுவைத்தவர் என்ற வகையில் கார்கில்ஸ் வங்கி பிஎல்சி பதிவு செய்யப்பட்ட PQ 00293614 ( முன்னர் கார்கில்ஸ் வங்கி லிமிடெட் பதிவு செய்யப்பட்ட இல. PB 4847 என அழைகக்ப்பட்டது ) என்ற பெயரில் பிரசித்த நொத்தாரிசு ஆர்.ஜே.ஏ. வத்சலா குமாரி ஹெராத் மற்றும் பிரசித்த நொத்தாரிசு பீ.கே.ஆர்.ஏ.எஸ்.சுபசிங்க என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2021.04.30 மற்றும் 2021.04.22 ஆந் திகதியிடப்பட்ட 585/ 7096 ஆம் இலக்கத்தைக் கொண்ட அடமானப் பத்திரம் மூலம் மற்றும் பிரசித்த நொத்தாரிசு கே.எஸ். பீ. டபிள்யூ. ஜயவீர என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.12.31 ஆந் திகதியிடப்பட்ட 6475 ஆம் இலக்கத்தைக் கொண்ட ஈட்டுமுறி, மீது கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள சொத்து மற்றும் வளாகங்கள் அடமானம் வைக்கப்பட்டு வழங்கப்பட்ட கடன் வசதியில் கடனை திருப்பிச் செலுத்தத் தவறியமையினால்,

2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணி அமைந்திருக்கும் இடத்திலேயே கார்கில்ஸ் வங்கி லிமிட்டட்டினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்காவட கோரளையில், கண்டி மாநகர சபை எல்லைக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரவுக்குள் பிரிம்ரோஸ் கிராம அலுவலர் பிரிவுக்குள் இப்போது பிரிம்ரோஸ் ஹில்லில் உள்ள ஜோர்ஜ் ஈ.டீ. சில்வா மாவத்தை ( தேவானி ராஜசிங்க மாவத்தை) தற்போது வரிமதிப்பீட்டு இல. 15, படுவத்த வீதி, லேடி பிளாக்ஸ் டிரைவில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டு இல.15/ 2, வஜிராராம மாவத்தை, ப்ரிம்ரோஸ் ஹில் எஸ்டேட் என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். ஏகநாயக்க என்பவரினால் அளவீடு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட இல. 2008 மற்றும் 2000, யூன் மாதம் 25 ஆந் திகதி அன்று வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 1 என அடையாளமிடப்பட்ட பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் பதினைந்து தசம் ஒரு பேர்ச் (0ஏ.0றூ. 15.1பே.) மேற்கூறப்பட்ட வரைபட இல. 2008 இன் படி மற்றும் மண் அதிலுள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள், பழங்கள் மற்றும் அதில் உள்ள அனைத்தும் அடங்களாக உள்ள விஸ்தீரணமான காணி மற்றும் கண்டி காணிப் பதிவேட்டில் தொகுதி/ போலியோ ஏ 668/ 132 இல் பதிவு செய்யப்பட்டது. வீடுகளிலிருந்து கண்டி ,ஜோர்ஜ் ஈ.டி. சில்வா மாவத்தை வரையிலான 20 அடி வீதிக்கு மேல் மற்றும் வழியின் உரிமையுடன் சேர்ந்து.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:** கண்டி நகர மையத்திலிருந்து பேராதனை வீதியில் சுமார் 01 கி.மீ. தூரம் தோடன்வல வீதி சந்தி வரை சென்ற பிறகு, ஜோர்ஜ் ஈ.டி. சில்வா மாவத்தையில் வலதுபுறம் திரும்பி, பிரிம்ரோஸ் வீதி சந்திக்கு சுமார் 1.6 கி.மீ. தூரம் சென்ற பின்னர் பிரிம்ரோஸ் வீதியில் வலது புறம் திரும்பி , பீட்டர் கூரே பிளேஸ் வீதிக்கு சுமார் 600 மீ. சென்று அங்கிருந்து இடதுபுறம் திரும்பி பீட்டர் கூரே பிளேஸ் வீதியில் சுமார் 10 மீ. சென்ற பிறகு இந்த சொத்து வீதியின் இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

***தீர்மானம் முடிவு அறிவித்தல்கள்.-*** 2024.05.03, 2024.05.17 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையிலும் மற்றும் "மவ்பிம", "சிலோன் டுடே" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளில் 2024.05.09ஆந் திகதி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10% (நூற்றுக்கு பத்து வீதம்);
(2) உள்ளூராட்சி மன்ற வரி 01% (நூற்றுக்கு ஒரு வீதம்);
(3) ஏல தாரரின் தரகுப் பணம் என்ற வகையில் கொள்வனவு விலையின் 2.5% (நூற்றுக்கு இரண்டரை வீதம்) அத்துடன் அதற்கான வரி கட்டணம்;
(4) விளம்பரத்துக்கான மொத்த செலவுகள் மற்றும் ஏல விற்பனைக்காக ஏற்படும் பிற செலவுகள் அனைத்தும்;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1000.00;
(6) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம்.

கொள்வனவு விலையின் 90% வீதத்தையும், மிகுதி இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்துதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, ஏற்கனவே செலுத்தியுள்ள கொள்வனவு விலையின் 10% வீத பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள: மீள் பெறுகை- தலைவர், கார்கில்ஸ் வங்கி லிமிட்டட், இலக்கம் 696, காலி வீதி, கொழும்பு 3. தொ.பே.இல. 011-7640450.

* முன் அறிவிப்பு இல்லாமல் மேற்கண்ட ஏல விற்பனையைத் தடுத்து நிறுத்த/ இரத்து செய்ய வங்கிக்கு உரிமை உண்டு.

சந்திமா பிரியதர்ஷனீ கமகே,
நீதிமன்ற ஆணையாளர்,
விலை மதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை,
பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி : 071-4318252, 011- 2173282.

08- 47

---

**கார்கில்ஸ் வங்கி பிஎல்சி**
**( முறையாக அறியப்படுகின்ற கார்கில்ஸ் வங்கி லிமிட்டட்)**

**பொது ஏல விற்பனை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை

கடன்பட்டோர் என்ற வகையில் அஜந்த நிரோஷன் பாதுக்க என்பவருக்காக நொத்தாரிசு எஸ்.ஏ.எஸ. பி.கே. சுபசிங்க என்பவரினால் 2022.02.07 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட அடமான பத்திர இல. 768 மற்றும் 770 கார்கில்ஸ் வங்கி லிமிட்டட் பதிவு இல. PQ 00293614 (முறையாக அறியப்படுகின்ற கார்கில்ஸ் வங்கி லிமிட்டட் பதிவு இல. PB 4847) முறையாக ஈடுவைக்கப்பட்ட கீழ் அட்டவணையில் மேலதிக விபரங்களுடன் விபரிக்கப்பட்ட ஈடுவைத்தோரால் திரும்ப செலுத்த தவறிய சொத்து.

கார்கில்ஸ் வங்கி லிமிட்டட் ஆல் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தினால் கீழ்க்காணும் அட்டவணை விபரங்களில் அடங்கிய சொத்துக்கள் அதே இடத்தில் 2025, ஓகத்து 25 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**மேல் கூறப்பட்ட அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளை பல்லேபத்து கெஸ்பாவ பிரதேச செயலாளர் பிரிவில் கெஸ்பாவ நகர சபை எல்லைக்குட்பட்ட சுவரபொல கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் சுவரபொலவில் அமைந்துள்ள தற்போதைய வரிமதிப்பீட்டு இல. 129, 129/3, 129/ 4 மற்றும் 129/4 A மற்றும் 129/5 மொரட்டுவ வீதியில் உள்ள "தவட்டகஹாவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் டில்ருக் என். வடஹே என்பவரினால் 2021,யூலை 05 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1563, துண்டு M (அனுமதிபெற்ற நில அளவையாளர் என்.ஏ. ஈ. ஜே. சில்வா என்பவரினால் 1992, செத்தெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 577 துண்டு 1 மீளளவீடு செய்யப்பட்டது துண்டு 1 இன் (ஒரு பகுதி ) 3 மற்றும் 4 ( நிலவரைபட இல. 3066 துண்டுகள் 4 A, 4B மற்றும் 4C ஆக பிரிக்கப்பட்டது ) இது அனுமதி பெற்ற நில அளவையாளர் டீ.டீ. பூரா என்பவரினால் 1965, செத்தெம்பர் 15 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 105 மற்றும் பகுதி (மீளளவீடு செய்யப்பட்டது). இது அனுமதிபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. ஏ.எல்.டீ. சில்வா என்பவரினால் 1947.11.16 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1001 A துண்டு B 1 (நிலவரைபட இல. 577 துண்டு 2 இன் ஒரு பகுதி) சகலதும் அளவிடப்பட்டு குறிப்பிடப்பட்ட சொத்து அங்கு காணப்படும் கட்டடங்கள், மணல், மரங்கள் பயிர்த்தோட்டங்கள் மற்றும் அனைத்துமுடன், இரண்டு றூட் நான்கு தசம் இரண்டு ஐந்து பேர்ச் ( 0ஏ. 2றூ.4.25பே.) (0.2131 ஹெ.) விஸ்தீரணத்தை நிலவரைபட இல. 1563 கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட மீளளவீடு செய்யப்பட்ட தொடர் காணியின் விபரம் பின்வருமாறு:

(1) "தவட்டகஹாவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் என்.ஏ . ஈ. ஜே. சில்வா என்பவரினால் 1992, செத்தெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 577 துண்டு 1 சகலதும் குறிக்கப்பட்டு அளவிடப்பட்டு தெல்கந்த காணிப்பதிவகத்தில் தலைப்பு/ பரிமாணம் C1189/ 15 இன் கீழ் பதியப்பட்டது.

(2) "தவட்டகஹாவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் டீ.டீ.பூரா என்பவரினால் 1965, செத்தெம்பர் 15 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 105 துண்டு 3 சகலதும் பகுதியாகப் பிரிக்கப்பட்டது அளவிடப்பட்டு தெல்கந்த காணிப்பதிவகத்தில் தலைப்பு/ பரிமாணம் C1189/ 20 இன் கீழ் பதியப்பட்டது.

(3) "தவட்டகஹாவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் பி.ஏ.கே. ஜே. பெரேரா என்பவரினால் 2000, திசெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 3066 துண்டு 4B சகலதும் பகுதியாகப் பிரிக்கப்பட்டது அளவிடப்பட்டு தெல்கந்த காணிப் பதிவகத்தில் தலைப்பு/ பரிமாணம் C1189/ 17 இன் கீழ் பதியப்பட்டது.

(4) "தவட்டகஹாவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் பி.ஏ.கே. ஜே. பெரேரா என்பவரினால் 2000, திசெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 3066 துண்டு 4C சகலதும் பகுதியாகப் பிரிக்கப்பட்டது அளவிடப்பட்டு தெல்கந்த காணிப் பதிவகத்தில் தலைப்பு/ பரிமாணம் C1189/ 19 இன் கீழ் பதியப்பட்டது.

(5) "தவட்டகஹாவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் டில்ருக் என். வடஹே என்பவரினால் 2021, யூலை 25 மற்றும் 28 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1716 துண்டு K ( அனுமதி பெற்ற நில அளவையாளர் என்.ஏ.ஈ. ஜே. சில்வா என்பவரினால் 1992.09.20 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 577 துண்டு 2 மற்றும் அனுமதிபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. ஏ. எல்.டீ. சில்வா என்பவரினால் 1947.11.16 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1001 A துண்டு B 1 மீளளவீடு செய்யப்பட்டது) இது தெல்கந்த காணிப் பதிவகத்தில் தலைப்பு/ பரிமாணம் C1189/ 16 இன் கீழ் பதியப்பட்டது.

அத்துடன் "தவட்டகஹவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி வழி விதிமுறைகளுக்கமைய அதன் மேலாகவும் மற்றும் அதனூடாகவும் துண்டு 1 (8 அடி அகலம்) அனுமதிபெற்ற நில அளவையாளர் டீ.டீ. பூரா என்பவரினால் 1965, செத்தெம்பர் 15 ஆந் திகதியிடப்பட்ட நில வரைபட இல. 105 துண்டு 1 மற்றும் அனுமதிபெற்ற நில அளவையாளர் பி.ஏ.கே.ஜே. பெரேரா என்பவரினால் 2000, திசெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட நில வரைபட இல. 3066 இல் துண்டு 4 A இல் 4 அடி அகலமான பாதை குறிப்பிடப்பட்டுள்ளது.

**சென்றடைகின்ற விதம்:** கொழும்பு கோட்டையிலிருந்து அதிவேக (A4) பாதை வழியாக கொழும்பு - ஹொரனை வீதி மார்க்கமாக பிலியந்தல சந்தி வரை செல்லவும். பின் வலது பக்கமாக திரும்பு பிலியந்தலை - மொரட்டுவ வீதி வழியாக சுமார் 350 மீற்றர் தூரம் சென்றால் இடது கைப்பக்கத்தில் குறிக்கப்பட்ட சொத்து அமைந்திருக்கும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தல்கள்.-*** 2024.02.22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையிலும் மற்றும் ''மவ்பிம'', ''சிலோன் டுடே'' மற்றும் ''தினக்குரல்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும்:

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்);
(2) உள்ளூராட்சி அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி 01% (ஒரு வீதம்);

(3) ஏல விற்பனையாளர் கட்டணமாக 2 1/2 % ( இரண்டரை வீதம்) கொள்விலையிலும் வரி அறவீட்டிலும்;
(4) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் ஏனைய விற்பனை செலவுகள் ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 1000.00;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம்.

கொள்வனவு விலையின் 90% அல்லது இலங்கை அரசினால் விதிக்கப்பட்ட வரிகள் மற்றைய செலவினங்கள் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தல் வேண்டும் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தல் வேண்டும்..

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதி தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10 % கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

மேலதிக விபரங்களுக்கு : தலைமை மீட்பலுவலகம், கார்கில்ஸ் வங்கி லிமிட்டட், இலக்கம் 696, காலி வீதி, கொழும்பு 3. என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். (தொ.பே.இல. 011-7640450.)

* மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்யவும் இடை நிறுத்தவும் முடியும். .

துசித்த கருணாரத்ன,
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி என்ட் எச் ஒக்சன்,
இல. 50/ 3,
விஹார மாவத்தை,
கொலன்னாவ.

தொலைபேசி : 011-3068185, 2572940.

08- 09

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தின் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

### அட்டவணை 2025

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | |
|---|---|---|---|---|---|---|
| ஓகத்து | .. | வெள்ளி | 01.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 18.07.2025 |
| | | வியாழன் | 07.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 25.07.2025 |
| | | வெள்ளி | 15.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 01.08.2025 |
| | | வெள்ளி | 22.08.2025 | .. | நண்பகல் 12 | வியாழன் 07.08.2025 |
| | | வெள்ளி | 29.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 15.08.2025 |
| செத்தெம்பர் | .. | வியாழன் | 04.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 22.08.2025 |
| | | வெள்ளி | 12.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 29.08.2025 |
| | | வெள்ளி | 19.09.2025 | .. | நண்பகல் 12 | வியாழன் 04.09.2025 |
| | | வெள்ளி | 26.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 12.09.2025 |
| ஒற்றோபர் | .. | வெள்ளி | 03.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 19.09.2025 |
| | | வெள்ளி | 10.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 26.09.2025 |
| | | வெள்ளி | 17.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 03.10.2025 |
| | | வெள்ளி | 24.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 10.10.2025 |
| | | வெள்ளி | 31.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 17.10.2025 |

**எஸ்.டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது